சுருக்கம்

பணியமைப்பு – கருவூலக் கணக்குத் துறை – திரு. S.தீபக், இளநிலை உதவியாளர், தஞ்சாவூர் மாவட்டக் கருவூல அலகிற்குட்பட்ட சார்கருவூலம், பட்டுக்கோட்டை அலுவலகம் – கருணை அடிப்படையில் 10.01.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

**நிதி (கருவூலக் கணக்கு – 2)த் துறை**

அரசாணை (3ப) எண்.65

நாள். 01.11.2023
சோபகிருது, ஐப்பசி–15,
திருவள்ளுவர் ஆண்டு –2054.

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.18, தொ.(ம).வே.வா.(க்யூ1)த் துறை, நாள் 23.01.2020.
2. தஞ்சாவூர் மாவட்ட கருவூல அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.12351/2021/அ2, நாள்.07.01.2022.
3. கருவூல கணக்கு ஆணையரின் கடித ந.க.எண். 4635/2023/சி1, நாள்.21.03.2023.

*******

**ஆணை:**

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கருவூலக் கணக்கு ஆணையரின் கடிதத்தில், கடலூர் மாவட்ட கருவூல அலகில், மாவட்டக் கருவூலம், கடலூர் அலுவலகத்தில் இரவுக்காவலராக பணிபுரிந்து வந்த திரு.A.சம்பத் என்பவர் 04.07.2019 அன்று பணியிலிருக்கும் போது பணியிடை மரணமடைந்ததைத் தொடர்ந்து, அவரது வாரிசுதாரர் மற்றும் மகனுமான திரு. S.தீபக் என்பவர் கருணை அடிப்படையில் கருவூல மற்றும் கணக்குத் துறையில் தஞ்சாவூர் மாவட்டக் கருவூல அலகிற்குட்பட்ட சார்கருவூலம், பட்டுக்கோட்டை அலுவலகத்தில் பணியமர்த்தப்பட்டு, 10.01.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார் என்றும், இடைநிலைக் கல்வி பள்ளி இறுதி வகுப்பில் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், பணியேற்பு செய்த நாளில் அரசால் நிர்ணயிக்கப்பட்ட வயதினை நிறைவு செய்துள்ளார் என்றும், இறந்த அரசு ஊழியரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்றும், தனியரின் குடும்பத்தில் எவரும் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியவில்லை என்பதற்கான சான்றிதழினை அளித்துள்ளார் என்றும், தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் பெறுவதற்கான தகுதியை தனியர் பெற்றுள்ளார் என்றும், தெரிவித்து அவரது



//த.பி.பா//

பணியினை 10.01.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசினைக் கோரியுள்ளார்.

2. மேலே, இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல் முறை ஆணையில் திரு.S.தீபக், (காலஞ்சென்ற திரு.A.சம்பத், இரவுக்காவலர் என்பவரின் வாரிசுதாரர் மற்றும் மகனான) என்பவர் கருணை அடிப்படையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-ல் பிரிவு 17-ன் உட்பிரிவு (1)-ன்படி தற்காலிகமாக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டார். மேலும் அச்செயல்முறை ஆணையின்படி தனியர், தஞ்சாவூர் மாவட்டக் கருவூல அலகிற்குட்பட்ட சார்கருவூலம், பட்டுக்கோட்டை அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக 10.01.2022 முற்பகல் முதல் தற்காலிகமாக பணிபுரிந்து வருகிறார். அவரது பணியினை 10.01.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசினைக் கோரியுள்ளார்.

3. கருவூலக் கணக்கு ஆணையரின் கருத்துருவினை உரிய ஆவணங்களுடன் அரசு கவனமுடன் பரிசீலித்து, இளநிலை உதவியாளர் பணியிடத்தில் ஓராண்டிற்கு மேலாகப் பணிபுரிந்து வரும் திரு.S.தீபக் என்பவரின் தற்காலிகப் பணிநியமனமானது, இளநிலை உதவியாளர் பதவியில் திருப்தி அளிக்கும் படியாக உள்ளதாலும், கருணை அடிப்படையிலான நியமனத்திற்குரிய அனைத்துத் தகுதிகளையும் தனியர் நிறைவு செய்துள்ளதாலும், திரு.S.தீபக் இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை தனியர் பணியேற்ற நாளான 10.01.2022 முற்பகல் முதல் அவர் அப்பதவிக்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைகுட்பட்டு வரன்முறைப்படுத்தி அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால் ஆண்டு ஊதிய உயர்வு / ஊதிய நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் தனியர் அவற்றினைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார். மேலும் தனியர் பொருட்டு தமிழ்நாடு கருவூலக் கணக்குத் துறை பணிவிதிகளின்படி அன்னாருக்கு தகுதிகாண்பருவம் துவங்குதல் மற்றும் வரையறுக்கப்பட்ட தேர்வுகள் மற்றும் பயிற்சிகள் ஏதும் இருப்பின் அது குறித்து தக்க செயல்முறை ஆணை கருவூலக் கணக்கு ஆணையரால் வெளியிடப்பட வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது .

(ஆளுநரின் ஆணைப்படி)

த. உதயச்சந்திரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

திரு.S.தீபக், இளநிலை உதவியாளர், தஞ்சாவூர் மாவட்டக் கருவூல அலகிற்குட்பட்ட சார்கருவூலம், பட்டுக்கோட்டை அலுவலகம், (பணிப்பதிவேடு மற்றும் அனைத்து மூலச்சான்றிதழ்கள்) (துறைத் தலைவர் வழியாக)

மாவட்ட கருவூல அலுவலர், தஞ்சாவூர்.
மண்டல இணை இயக்குநர், திருச்சி.

<u>நகல்</u>

மனித வள மேலாண்மைத் துறை, சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

01/11/23

பிரிவு அலுவலர்

1/11/23